ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

भवजलधिमगाधं दुस्तरं निस्तरेयं
कथमहमिति चेतो मास्मगाः कातरत्वम् ।
सरसिजदृशि देवे तावकी भक्तिरेका
नरकभिदि निषण्णा तारयिष्यत्यवश्यम् ॥

विष्णुस्तोत्रम् ॥

ஹே மனமே! அதிக ஆழமாயும், தாண்டமுடியாததாயுமிருக்கும் ஸம்ஸாரமென்னும் கடலை எப்படித்தாண்டி அக்கரை செல்வேன் என்று பயத்தை அடையாதே. தாமரை மலர்போல் விளங்கும் நேத்திரங்களையுடையவரும், பாபிகளால் அனுபவிக்கப்படும் நரகமென்கிற கொடியதுக்கத்தைப் போக்கும் சக்தி பெற்றவருமான விஷ்ணு என்கிற தேவதையினிடத்தில் திருடமான பக்தி உனக்கு ஏற்படுமாகில் அது ஒன்றே, பவம் என்கிற ஸமுத்திரத்திலிருந்து உன்னைக் கரையேற்றிவிடும். இதில் சங்கை வேண்டாம்.

ஒருவன் ஸம்ஸாரபந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு பலவித கஷ்டங்களை அடிக்கடி அனுபவித்து மிகவும் சிரமப்பட்டுக் கவலையுடனிருக்குங்கால், அவன் மனமும் உத்ஸாஹமின்றி சோர்வையடைந்து இருக்கும்பொழுது அதைப் பார்த்துச் சொல்கிறான். ஹே சித்தமே! பவமென்னும் இக்கொடிய கஷ்டங்களிலிருந்தும் நாம் எப்படி வெளிவந்து சுகித்திருக்கலாமென்று கவலை கொள்ளாதே. எவ்விதக் கஷ்டங்களையும் சுலபமாய்ப்போக்கி சகல ஜனங்களையும் ரக்ஷிக்கிறேனென்று கங்கணம்பூண்ட ஸ்ரீ புண்டரீகாக்ஷரான பகவான் விளங்கிக்கொண்டிருக்கிறான். அந்தப் பிரபுவைக் கைவிடாமல் எப்பொழுதும் அவருடைய சரணாவிந்தங்களில் திருடமான பக்தியிருந்தால் நாம் இந்தக் கஷ்டத்திலிருந்தும் சீக்கிரம் விலகலாம். ஆகையால் நீ பகவத்பக்தியைக் கைவிடக்கூடாது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

குரோதன-ஞு ஐப்பசி-மீ கூ௨

தீபாவளி.

இந்தவருஷம் நடந்தேறிய தீபாவளியைப்பற்றிப் புரட்டாசி மாதம் 30௨ என்று பலரும், ஐப்பிசிமாதம் 29௨ என்று சிலரும் பேபர்கள் மூலமாயும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாயும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் பிரஸித்தர்களான சில ஸம்ஸ்கிருத வித்வான்கள் சாஸ்திரங்களை நன்கு ஆராய்ச்சி செய்து புரட்டாசிமீ 30௨யில்தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஏற்பட்ட தீர்மானத்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் திவ்விய ஸந்நிதியில் விக்ஞாபனம் செய்ததில் அந்த ஸந்நிதியிலிருந்தும் அவ்விதமே புரட்டாசிமீ 30௨ செய்வதுதான் சாஸ்திராபிப்பிராயமென்று வெளியிடும்படிக்கும் ஆக்ஞை ஏற்பட்டது. அதை அனுஸரித்து உடனே விஸ்தாரமாய் அறிவிக்க அவகாசக்குறைவாலும் அந்த ஸமயத்தில் நம் பத்திரிகைக்கு விடுமுறை ஸமயமானதினாலும் புரட்டாசிமீ 30௨யே அனுஷ்டிக்கவேண்டுமென்கிற முக்கியமான விஷயத்தை மாத்திரம் துண்டுப் பிரசுரத்திலும் வேறு சில பத்திரிகைகளிலும் அதே ஸமயத்தில் வெளியிட்டு ஆஸ்திகர்களனைவரையும் 30௨யே அனுஷ்டிக்கும்படி அறிவித்தாய்விட்டது. இனியும் இந்த விஷயத்தில் சங்கை உண்டாகாமலிருக்கவேண்டி ஐப்பிசிமீ 29௨ செய்யவேண்டுமென்று சிலர் படும் அபிப்பிராயம் சரியல்லவென்பதையும் அறிவிக்கவேண்டியது முக்கியமெனக் கருதி அதையும் எம் சிற்றறிவிற்கெட்டியவரை நிரூபிக்க முன்வருகிறோம்.

தீபாவளி என்று கூறப்படுவது சதுர்த்தி விருதம், அஷ்டமி விருதம், ஷஷ்டி விருதம் என்பவைபோல் சதுர்த்தசியில் அனுஷ்

டிக்கவேண்டிய ஒருவிருதமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. விருதங்களில் காம்யமென்றும், நித்தியமென்றும் இருவகையுண்டு. இந்தத் தீபாவளி விருதத்தைக் காம்யமென்று பலரும் நித்தியமென்று சிலரும் கருதுகிறார்கள். எங்ஙனமிருந்தாலும் இம்மையிலோ, மறுமையிலோ நற்பயனை விரும்புவோர்களும் முக்கியமாய் 'நரகதுக்கத்தை நாம் அனுபவிக்காமலிருக்கவேண்டும்' என்கிற எண்ணமுடையவர்களும் அவசியம் இதை அனுஷ்டித்தே தீரவேண்டுமென்று சாஸ்திரங்களின் கொள்கை. இதனால் தீபாவளி என்கிற நரகசதுர்த்தசி ஸ்நானமும் ஒரு விருதமென்று ஏற்பட்டது. நம்மால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் அவைகளின் ஸ்வரூபம், காலம், அனுஷ்டிக்கவேண்டிய முறை முதலான விஷயங்களில் சந்தேகம் வந்தால் ஸ்மிருதி, புராணம், பெரியோர்களுடைய அனுஷ்டானம் இவைகளை நன்கு விசாரித்துத் தீர்மானித்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல் தமிழ் நூல்களைக்கொண்டு நிர்ணயிப்பது சாத்தியமல்ல. அவைகள் இவ்வித விஷயங்களைத் தீர்மானிப்பதின் பொருட்டு ஏற்பட்டவைகளுமல்ல. ஒரு சமயம் எதிர்ச்சையாக எங்காகிலும் அனுஷ்டிக்கவேண்டிய கர்மா முதலியவைகளைப்பற்றிக் கூறியிருந்தாலும் ஸ்மிருதி முதலிய பிரமாணங்களை அனுஸரித்திருப்பின் அதையும் ஏற்றுக்கொள்ளலாமேயன்றி இல்லாவிடில் அதை விலக்கவேண்டிவரும் என்பதும் அறிஞர்கள் அறிந்தவிஷயமே. இவற்றால் பிரகிருத விஷயத்தில் ஸ்மிருதி புராணம் முதலிய பிரமாணங்களையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அந்தக் கர்மானுஷ்டானங்களுக்குற்ற காலவிசேஷங்களையும் ஸ்மிருதி முதலியவைகளிற் கூறாமலிருந்தால் சோதிட நூல்களின் மூலமாய் அறியவேண்டிவரும்; கூறியிருப்பின் சோதிட நூல்களின் ஆராய்ச்சியும் நமக்கு அனாவசியகமே. 'ஸ்மிருதிகள் இந்தத் தீபாவளி விஷயமாய் எப்படி அபிப்பிராயப்படுகின்றன' என்பதை முந்தி விசாரிப்போம்.

आश्वयुक्कृष्णपक्षे तु चतुर्दश्यामिनोदये ।
तैलाभ्यङ्गेन कर्तव्यं स्नानमुष्णेन वारिणा ॥ स्मृतिरत्ने ।

प्रत्यूष आश्वयुक्कृष्णचतुर्दश्यामिनोदये ।
स्नानमभ्यज्य कर्तव्यं = इति स्मृत्यर्थसारे ।
यस्यां हतश्चतुर्दश्यां नरको विष्णुना निशि ।
चतुर्दशी याश्वयुजस्य कृष्णा = स्मृत्यन्तरे ।

ஆச்வயுக் கிருஷ்ண சதுர்த்தசியில் தீபாவளி ஸ்நானம் செய்ய வேண்டுமென்று இந்தக் கிரந்தங்களில் இருப்பதாக வைத்யநாத தீக்ஷிதர் அபிப்பிராயப்படுகிறார்.

आश्विनस्यासिते पक्षे चतुर्दश्यामिनोदये ।
स्नातव्यं तिलतैलेन = भविष्योत्तरे ।
पूर्वविद्धचतुर्दश्यामाश्विनस्य सितेतरे ।
पक्षे प्रत्यूषसमये स्नानं कुर्यात्प्रयत्नतः ॥

इति वालखिल्याः, व्रतचूडामणौ ।

निशा कृष्णचतुर्दश्यामाश्विनेऽर्कोदये नराः ।
यामिन्याः पश्चिमे यामे तैलाभ्यङ्गः ॥

இவ்விதமே நிர்ணயஸிந்து, தர்மஸிந்து, விரதசூடாமணி, ஹேமாத்திரி, காலாதர்சம், விரதராஜம், விரதார்க்கம் விரதகௌஸ்துபம் முதலிய பல கிரந்தங்களிலும் ஆச்வயுக் கிருஷ்ண சதுர்த்தசியில் தீபாவளிஸ்நானம் செய்யவேண்டுமென்று ஒரே அபிப்பிராயமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இனி 'ஆச்விந' சப்தத்திற்கு என்ன அர்த்தமென்பதை விசாரிக்கவேண்டும்.

'ஆச்வின'மென்றால் ஒரு மாசத்திற்குப் பெயரொன்றுதான் கூறவேண்டும். ஸௌரம், சாந்திரம், நாக்ஷத்திரம், பார்ஹஸ்பத்தியம் என்று பல பிரிவுகளேற்பட்டிருந்தாலும் நம் தேசங்களில் வைதிக கர்மானுஷ்டானங்களில் ஸௌரம், சாந்திரம் என்கிற இவ்விருமானங்களைக் கொண்டுதான் பொதுவாய் ஸகல கர்மாக்களும் நடைபெறுகின்றன. பிரகிருதத்தில் ஆச்விஜம் என்கிற பதத்தால் செய்யப்படும் வியவகாரம் ஸௌரமானத்தாலா, சாந்திரமானத்

தாலா? எந்த மானத்தைக்கொண்டு இப்பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதென்று விசாரிக்கவேண்டியதுண்டு. ஸௌரமானமாயிருந்தால் மேஷம், விருஷபம், கன்னி, துலாம் என்று அந்தந்த ராசியின் பெயரைக்கொண்டே அந்தந்த மாசங்களின் வியவகாரம் ஏற்படுமேயன்றி வைசாகம், ஆஷாடம், ஆச்விநம் என்கிற பதங்களைக்கொண்டு ஸௌரமானத்தை வியவகரிப்பதில்லை. தீபாவளி விஷயத்தில் ஆச்விநக் கிருஷ்ண சதுர்த்தசி என்று ஒரே மொழியாய்ப் பல ஸ்மிருதிகளிலும் மொழிந்திருப்பதால் சாந்திரமானத்தைக் கொண்டுதான் சொல்லியிருக்கிறார்களென்று நிச்சயமாய்த் தெரிகின்றது. இவ்விதமே,

चान्द्रो मासः श्रुतिःस्स्मृत्योः कर्मणोर्मासिकाब्दिके विहाय ॥

என்கிற திரிகாண்டியினுடைய இந்த வசனத்தை எடுத்துக்கொண்டு மாஸிகம், ஆப்திகம் இவைகளைத் தவிர சிரௌத ஸ்மார்த்த கர்மாக்கள்யாவும் சாந்திரமாஸத்திலேயே செய்யவேண்டுமென்று வைத்யநாத தீக்ஷிதர் ஸ்பஷ்டமாய் எழுதியிருக்கிறார். மேலும், 'ஸ்மிருத்யந்தரே' என்று துவக்கி (**व्रतेचांद्रमसंशास्तम्**) 'விரதானுஷ்டானங்களில் சாந்திரமானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். அதுதான் சிறந்தது' என்று அவரே வெளியிட்டிருக்கிறார். இவைகளால் இந்தத் தீபாவளி விருதமும் சாந்திரமானத்தைக் கொண்டே அனுஷ்டிக்கப்படவேண்டுமென்று தெரிகின்றது. ஆச்விந, ஆச்வயுஜ என்கிற இந்த இரண்டு பதங்களுக்கும் சாந்திர மாஸம்என்று தாராநாததர்க்கவாசஸ்பதிஅவர்களால்சப்தஸ்தோம மஹாநிதியிலும் அர்த்தம் எழுதப்பட்டிருக்கின்றது. சாந்திர மாசத்தை எப்படி நிர்ணயிப்பதென்றால்அடியில்வருமாறு காண்க.

दर्शान्तः पूर्णिमान्तश्च चान्द्रो मासो द्विधा स्मृतः ।
नर्मदादक्षिणे भागे दर्शान्तो मास इष्यते ।
अमावास्यापरिच्छिन्नो मासस्स्याद्ब्राह्मणस्य तु ॥

इति वैद्यनाथदीक्षितीयश्राद्धकाण्डे ।

சுக்லபக்ஷப் பிரதமா திதிமுதல் அமைமுடிய ஒரு மாதமென்றும் கிருஷ்ணபக்ஷப் பிரதமா திதிமுதற்கொண்டு பௌர்ணமி முடிய

ஒருமாதம் என்றும் சாந்திரமானத்தை இரண்டுவிதமாகக் கூறு கின்றார்கள். இவ்விரண்டிற்குள் நர்மதை என்னும் நதிக்குத் தென்பாகங்களிலிருக்கும் தேசத்திற்கு சுக்ல பிரதிபத்துமுதற் கொண்டு அமாமுடிய ஒருமாதம் என்கிற பக்ஷத்தையே அங்கீ கரித்திருக்கிறார்கள். பிராமணர்களுக்கு இந்தப் பக்ஷமே முக்கிய மென்றும், வைத்யனாத தீக்ஷிதாவர்கள் சிராத்தகாண்டத்தில் நிர் ணயம் செய்திருக்கிறார்கள். இதனால் தீபாவளி விஷயத்தில் பல ரிஷிகளாலும் சொல்லப்பட்ட ஆச்விநமென்கிற சாந்திரமாசத்தை இவ்வருஷத்திய புரட்டாசிமீ 4௳யாகிய சுக்லப் பிரதமா திதி முதற்கொண்டு ஐப்பிசிமீ 1௳ வருகிற அமாமுடிய உள்ள தினங் களையே எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் ஏற்பட்ட ஆச் விநம் என்கிற சாந்திரமாசத்தில் கிருஷ்ண சதுர்த்தசி திதி எது என்று கவனித்தால் புரட்டாசிமீ 30௳யிலுள்ள திதியாகுமே யல்லாது ஐப்பிசிமீ 29௳யுள்ள திதி ஆகமாட்டாது. ஐப்பிசிமீ 1௳யோடு ஆச்விநமாதமே முடிந்துவிட்டது.

சிஷ்டாசாரங்களைக்கவனித்தாலும் புரட்டாசிமீ தான்நடத்த வேண்டுமென்று புலப்படுகின்றது. சற்றேறக்குறைய இருபது வருஷத்திற் கொருமுறை இவ்விதம் புரட்டாசிமீத்தில் தீபாவளி வருமென்று ஜோஸியர்கள் கூறுகின்றார்கள். அவ்விதமே பழைய பஞ்சாங்கங்களிலும் 14—10—1868-க்குச் சரியான விபவ வரு ஷத்திலும், 16—10—1906-க்குச் சரியான பராபவ வருஷத்தி லும் புரட்டாசிமீ 30௳யில் நரகசதுர்த்தசி தீபாவளியும், ஐப்பிசி மாதம் 1௳ அமாவாஸையும் வந்திருக்கிறது. அக்காலத்தில் இம் மாதிரி சந்தேகம் அற்பங்கூட ஏற்படாமல் எல்லாபண்டிதர்களும் அந்தப் புரட்டாசிமாதத்திலேயே அனுஷ்டித்தார்களென்று தற் காலத்திலும் விளங்கும் சில பெரியோர்களான விருத்தர்களும் கூறுகின்றார்கள். இவைகளை எல்லாம் கவனித்தால், இவ்வருஷத் திய தீபாவளியைப் புரட்டாசிமீ நடத்தியதே சாஸ்திர சிஷ்டா சார சம்மதமென்று நன்கு வெளியாகின்றது.

இனி, ஐப்பிசிமீ தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறு கிறவர்களால் வெளியிடப்பட்டிருக்கும் பிரமாணவசனங்கள் அவர்

கள் அபிப்பிராயப்படி பிரமாணமாக ஆகின்றனவா? என்பதையும் விசாரிப்போம்.

அவர் கூறும் பிரமாணங்களுள் முக்கியமானது,

उषोऽभ्यङ्गं तुलास्नानं कृत्तिकादीपमेव च ।
धनुर्मासि हरेः पूजा शिवरात्रिव्रतं तथा ।
सौरमानेन कर्तव्यं चान्द्रमाने न कारयेत् ॥

என்கிற இவ்வசனமே.

இந்த வசனத்தால் தீபாவளி ஸ்நானம் சாந்திரமானத்தில் செய்யக்கூடாதென்றும் ஸௌரமானத்தில்தான் செய்யவேண்டுமென்றும் ஏற்படுகிறபடியால் சாந்திரமானமென்று எப்படிச் சொல்லலாமென்று சிலர் சங்கிக்கலாம். உமாமகேசுவர சாஸ்திரியார் சந்தேகப்படுவதற்கு இதுவே முக்கிய ஆதாரமாகும். இச்சங்கை சரியல்ல.

1. வைத்யனாத தீக்ஷிதீயம், நிர்ணயஸிந்து, தர்மஸிந்து, விரதசூடாமணி, ஹேமாத்திரி, காலாதர்சம், விரதராஜம், விரதார்க்கம், விரதகௌஸ்துபம் மற்றுமுள்ள நிபந்தனைக்கிரந்தங்கள் இவைகளில் ஓரிடத்திலாவது ஒருவரேனும் இவ்வசனமிருப்பதாகவெளியிடவில்லை. சிஷ்டாசாரங்களிலும் இந்த வசனத்தை ஏற்றுக்கொண்டிருப்பதாகப் புலப்படவில்லை. இந்த மாதிரியே இருபது வருஷத்திற்கு முன்னும் அதற்கு முன்னும் புரட்டாசிமீ த்தில் வந்த ஸமயங்களில் அதே ஸமயத்தில் அனுஷ்டித்திருப்பதாகத் தற்காலத்திலுள்ள சில பெரியார்களும் கூறுகிறார்கள். இவ்விதம் முன்காலங்களில் அனுஷ்டித்த பண்டிதர்களும், பல ஸ்மிருதிகளும் 'உஷோப்யங்கம்' என்கிற இவ்வசனமொன்றிருப்பதாகக் கருதாததினால் இந்த வசனம் பிரமாணமில்லை என்றும் இதைக்கொண்டு பல ஸ்மிருதி வசனங்களையும் சிஷ்டாசாரங்களையும் மாற்றுவது சரியல்லவென்றும் நன்கு விளங்குகின்றது.

2. இவ்வசனத்தைப் பிரமாண கோஷ்டியிலிருந்தும் விலக்குவது சரியல்ல. இதையும் அங்கீகரிக்கத்தான் வேண்டுமென்று வற்புறுத்தினால் **तुष्यतु** என்கிற நியாயத்தால் ஒப்புகிறோம்.

ஆனால் இவரிஷ்டப்படியே இதற்குப் பொருள் கொள்ளவேண்டு மென்கிற நிர்ப்பந்தத்திற்குட்படமுடியாது. பின்னை நாங்கள் இவ்விதம் அபிப்பிராயப்படுகின்றோம். அஃதாவது 'உஷோப்யுங் கம்'என்கிற பதத்திற்கு விடியற்காலத்தில் எண்ணெய் தேய்த்துக் கொள்கிறது என்று பொருளேற்படுகின்றது. இதற்குத் தீபாவளி யில் இவ்விதம் செய்யவேண்டுமென்று கூறுகிறதென்று எப்படி நிர்ணயிக்கமுடியும்? துலாஸ்நானம், கிருத்திகாதீபம், தனுர்மாஸ பூஜை என்கிற இடங்களில் அந்தந்த கர்மாவிற்குற்ற மாஸத்தை யும் பெயரையும் ஸ்பஷ்டமாய்க் காட்டியிருப்பதுபோல் 'தீபா வளி' என்று சொல்வதற்கு யோக்கியமான மாஸத்தையோ பெய ரையோ இவ்வசனத்தில் காணவில்லை. குறிப்பிட்டுக்கூறாவிட்டா லும் உஷோப்யங்கம் என்று சொல்லியிருப்பதைக்கொண்டு விடி யற்காலத்தில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய் வது தீபாவளியில் பிரஸித்தமாயிருப்பதால் அதை ஸௌரமானத் தில் அனுஷ்டிக்கவேண்டுமென்று இவ்வசனம் கூறுகின்றதென்று சொல்வோமே என்றால் அது சரியல்ல; ஸௌரமானப்படி நடை பெறும் சில விவாஹ முகூர்த்தங்களில் காலை 6 மணிக்கு முகூர்த் தம் நடந்தால் 5 மணிக்கு வதூவரர்களுக்கு அப்யங்கஸ்நானம் செய்விக்கிறதுண்டு. அவ்விதம்நடைபெறும்அப்யங்கத்தைத்தான் இந்த வசனம் விவாஹாதிகளில் ஸௌரமானப்படி உஷோப்யங் கம் செய்யவேண்டுமென்று கூறுகின்றது. இவ்விதம் சொன்னால் மற்றுமுள்ள பல வசனங்களோடு இதற்கு விரோதமும் இல்லை. ஆகையால் தீபாவளி ஸ்நானம் ஸௌரமானப்படிதான் செய்ய வேண்டுமென்று கூறுகிறவர்களுக்கு இவ்வசனம் ஆதாரமாகாது.

3. இந்த வசனம் தீபாவளி ஸ்நானத்தைப்பற்றியே சொல் கிறதாயிருந்தாலும் இந்த தீபாவளி ஸ்நானத்தை கிருத்திகாமாஸ கிருஷ்ண சதுர்த்தசியில் செய்யவேண்டுமென்று ஒருபக்ஷம் ஸ்மி ருதியில் கூறப்பட்டிருக்கிறது. அவ்விதமும் வடக்கு தேசத்தில் சில விடங்களில் நடக்கிறதாகக் கேள்வி. அந்தப் பக்ஷத்தைக் கொண்டு இந்த வசனம் கூறுகின்றதேயன்றி நம் தேசத்தில் நடைபெறும் ஆச்விநமாதம் என்கிற பக்ஷத்திற்கு இந்த வசனம் பிரமாணமாகமாட்டாது.

4. நாமும் இந்த வசனத்தைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டுமென்கிற ஆக்கிரகமிருப்பின் அங்கிகரிக்கின்றோம். எப்படி என்றால் இந்தத் தீபாவளியானது பெரும்பாலும் ஐப்பிசிமாதத்தில்தான் வரும். சுமார் இருபது வருஷத்திற்கொருதடவை புரட்டாசிமீ த்தில் வரும்; இவ்விதம் வருவது அபூர்வம். ஐப்பிசியில் வந்தால் அந்த சமயம் சாந்திரமானம், ஸௌரமானம் இரண்டும் சேர்ந்தே இருக்கும். இந்த வசனார்த்தப்படியே அந்த ஸமயங்களில் நடைபெறுகின்றபடியால் அந்த மாதிரி அனுஷ்டிக்கப்படும் காலங்களை ஸௌரமானமென்று இவ்வசனம் வெளியிடுகின்றதென்று கூறுவது உசிதமாகும். அதைவிட்டு எப்பொழுதாகிலும் அபூர்வமாய் இந்தமாதிரி வரும்ஸமயத்தில் பல ஸ்மிருதிகளாலும் சிஷ்டாசாரத்தாலும் அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்பஷ்டமாயறிவிக்கப்படும் இந்தத் தீபாவளியைக் கூடாதென்று தடுத்து வேறு ஸமயத்தில் அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறுவதற்கிந்த வசனத்திற்கு அற்பமேனும் பலமில்லை என்பது திண்ணம்.

இந்த விஷயத்தில் சில திராவிட பண்டிதர்கள் "ஸ்வாதீநக்ஷத்திரயோகம் வேண்டுமென்று சொல்லியிருப்பதால் ஐப்பிசியில்தான் அவ்விதமிருக்கின்றது. ஆகையால் அதுதான் ஆச்விஜம்; அந்தமாதம் 29உயில்தான் தீபாவளி செய்யவேண்டும்" என்று கூறுகிறார்கள். இதுவும் தவறேயாகும். ஸ்வாதியுடன் சதுர்த்தசி என்றால் எப்பொழுதும் அவ்விதமே இருக்கவேண்டும் என்கிற நியாயமில்லை. சில ஸமயங்களில் ஸ்வாதி முதலான சில நக்ஷத்திரயோகமும் சேரும்; சேர்ந்தால் அந்த ஸமயமும் அதிக விசேஷமான புண்யகாலமென்று அதற்குப் பொருள். சென்ற வருஷங்களில் ஸ்வாதீநக்ஷத்திர யோகமில்லாத ஆச்விநக்கிருஷ்ண சதுர்த்தசி திதியை மாத்திரம் முக்கியமாய்க்கொண்டு எத்துணையோ தீபாவளிகளை நாம் அனுஷ்டித்திருக்கிறோம். அக்காலங்களில் ஸ்வாதி யோகமில்லை என்று ஸ்வாதீயோகம் எந்த மாசத்திலிருக்கிறதோ அந்தமாசத்தை ஆச்விநமாசமென்று கருதி அந்த சதுர்த்தசியிலா தீபாவளியை அனுஷ்டித்தோம்? இல்லை. ஆகையால் இந்த விஷயத்தில் நக்ஷத்திரம் பிரதானமல்ல. மாசம், பக்ஷம், திதி இவைகளே முக்கியமாய் கவனிக்கவேண்டியவை. இவைகளோடுகூட ஸ்வாதி முதலிய நக்ஷத்திரமும் சேர்ந்தால் அதிக

விசேஷமுண்டு; சேராவிட்டால் அதை எதிர்பார்க்கவேண்டியது அனுவசியமே. இக்கருத்தைக் கொண்டுதான், உபாகர்மவிஷயத்திலும் 'சிராவண்யாமேவகாரயேத்'என்று வசனமிருந்தாலும், சில ஸமயங்களில் சிரவண நக்ஷத்திரம் இல்லாவிட்டாலும் பூர்ணிமா திதியை முக்கியமாகக்கொண்டு உபாகர்மத்தை நடத்திவிடுகிறார்கள். இவ்விதமே வைத்யநாத தீக்ஷிதீயம் முதலிய கிரந்தங்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதனால் புரட்டாசிமீ 30வயில் அச்வதீ நக்ஷத்திர ஸம்பந்தமில்லாதபடியால், அன்று நரக சதுர்த்தசி விரதத்தை அனுஷ்டிக்கக்கூடாதென்று சிலர் கருதுவதும் தவறென்றே ஏற்பட்டது. இந்த ஸமாதானத்தைக்கொண்டே ஆச்வயுஜ என்கிற பதத்திற்கு அச்வதீ நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணிமியையுடைய மாதம் என்று பொருள் என்று பாணிநி மஹரிஷி 'நக்ஷத்திரேணயுக்த: கால:'என்கிற ஸூத்திரத்தால் அனுசாஸநம் செய்திருப்பதால், புரட்டாசிமீ அவ்விதமில்லாதபடியால் ஐப்பிசிமாதத்தையே அங்கீகரிக்கவேண்டுமென்று கூறுவதும் உசிதமில்லையென்றே நன்கு அறிந்துகொள்ளலாம். மேலும், பாணிநி மஹரிஷி தத்திதன் என்கிற பிரத்தியத்தை விதித்து அதன் கருத்தை வெளியிடவந்தவரேயன்றி, கர்மானுஷ்டானத்திற்குற்ற காலத்தைக் குறிப்பிட்டுக் காட்டவந்தவரல்ல. ஆகையால் அது எவ்வளவு வரையில் தர்மசாஸ்திரத்திற்கு அனுஸரித்து வருகிறதோ, அவ்வளவுபரியந்தம் அதை அங்கீகரிக்கலாம். அதைக்கொண்டு தர்மசாஸ்திரங்களின் ஸித்தாந்தத்தை மாற்றமுடியாது.

நாகையிலிருந்தும் நமக்குக்கிட்டிய துண்டுப் பிரசுரத்தில் ஐப்பிசிமீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியில் இறந்த ஒருவருக்கு அடுத்தவருஷ புரட்டாசிமீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிராத்தம் செய்யலாமா ? ஐப்பிசியில் இறந்தவருக்கு அந்த மாசத்தில் தான் சிராத்தம் செய்யவேண்டுமென்றால் நரகாசுரனும் ஐப்பிசி மாசத்தில் இறந்தபடியால், தீபாவளிப் பண்டிகையையும் அந்த மாசத்தில்தான் செய்யவேண்டும். நரகாசுரனுடைய சிராத்த தினத்தைத்தான் பகவானுடைய ஆக்ஞையால் பண்டிகை என்று கொண்டாடி வருகிறோமென்று ஒருவர் வெளியிட்டிருக்கிறார். இதுவும் சரியல்ல.

நரகாசுரன், ஐப்பிசிமாதத்தில்தான் இறந்தான் என்பதை எந்தப் பிரமாணத்தைக்கொண்டு இவர் தீர்மானித்தாரோ தெரியவில்லை. சாஸ்திரங்களைக்கொண்டு இதை நிர்ணயிக்கவேண்டுமேயன்றி பிரத்தியக்ஷத்தால் ஸாத்தியமில்லை. சாஸ்திரங்களை கவனித்தால்,

चतुर्दश्यां तु हरिणा कृष्णेन जगतीपते ।
नरको निहतो नूनमसुरो लोककण्टकः ॥

ஓ ஜகத்பதியே! சதுர்த்தசியில் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரபூதராயும், ஸ்ரீ கிருஷ்ணபகவானால் உலகங்களுக்குக் கஷ்டத்தை யுண்டுபண்ணினவனான நரகாசுரன் அடிக்கப்பட்டானென்று வைசம்பாயன மஹரிஷி தர்மபுத்திரருக்குக் கூறியிருக்கிறார். மற்றும் சிலவிடங்களில் கிருஷ்ண சதுர்த்தசியில் கொல்லப்பட்டான் என்று இருக்கின்றது. இவ்விதம் கிரந்தங்களில் வெளியிட்டிருக்க, இவைகளுக்கு மாறுதலாக துலாமாதத்தில் நரகாசுரனை வதம்செய்தாரென்று வெளியிட்டிருப்பது மிகவும் தவறேயாகும். மேலும், நரகாசுரனுடைய சிராத்த தினத்தைத்தான் பகவானுடைய ஆக்ஞையின் பேரில் பண்டிகை என்று கொண்டாடுகிறோமென்று ஒருவிதமான மேற்கோளையும் காட்டாமல் தமக்குத் தோன்றியவாறு எழுதியிருக்கிறார்.

कृष्णं लोकोपकारार्थं स्तुत्वा वाचमुवाच ह ।
हे कृष्ण कमलानाथ शंखचक्रगदाधर ॥
महता दिव्यरूपेण मुक्तोऽहं भवता भयात् ।
ममास्मिन्मुक्तिदिवसे योऽभ्यङ्गस्नानतत्परः ॥
यजति त्वां प्रयत्नेन तस्य नाकं ददस्व ह ।
इत्युक्त्वा नरको धीमान् तं ववन्दे हरिं विभुम् ॥
एवं संप्रार्थितः कृष्णो नरकेण दयानिधिः ।
भविष्यति यथा प्रीतिस्ते तथास्त्वित्युवाच तम् ॥

பகவானால் அடிக்கப்பட்ட நரகாசுரன் அவரைப் பலவாறாகப் போற்றி, பிறகு நான் தங்களுடைய அனுக்கிரகத்தால் பயத்திலிருந்தும் விடுபட்டவனாய்க்கொண்டு முக்தனாக ஆய்விட்டேன்.

நான் முக்திபெற்ற இந்த தினத்தில் எவர்கள் அப்யங்கஸ்நானம் செய்து பக்திசிரத்தையுடன் உம்மைப் பூஜிக்கிறார்களோ, அவர்களுக்கு நீர் ஸ்வர்க்கத்தைக் கொடுக்கவேண்டும் என்று பகவானிடம் பிரார்த்தித்து அவரை நமஸ்காரம் செய்தான். கருணைக் கடலான ஸ்ரீ கண்ணன் அவனது வேண்டுகோளுக்கிணங்கி உன் னிஷ்டம்போல் ஆகட்டுமென்று அவனுக்கு பதில் அளித்தார் என்று வைசம்பாயனரே தர்மபுத்திரருக்குப் போதித்திருக்கிறார்.

இவ்வசனங்களால் சிராத்தம் என்று சொல்வதற்கு அற்பமாகிலும் இடங்கிடைக்கின்றதா? நரகன் தாம் முக்திபெற்றோம் என்கிற சந்தோஷத்தினால் உலகிலுள்ள ஜனங்களுக்கும் நம்மால் க்ஷேமமுண்டாக்கவேண்டுமென்கிற நல்லறிவுதோன்றி பகவானிடம் இவ்விதம் பிரார்த்தித்ததாகச் சொல்லியிருப்பதை இதற்கு மாறுபாடாக சிராத்தம் செய்யவேண்டுமென்றும் அதற்குமாசம் மாறக்கூடாதென்றும், ஒருவர் ஜனங்களுக்கு ஹிதோபதேசம் செய்ய முன்வந்தால் காலத்தின் கொடுமையைத் தவிர வேறு யாது கூறமுடியும்? அந்தோ!

போஜராஜர் பண்டிதர் இயற்றிய சர்ஜோதிமாலையில் "இரவி நற்றுலே சேர்மாதம் இராக்கதிர் குறையும்பக்கம்" என்கிற இந்த வசனத்தாலும், தீபாவளி ஐப்பிசி மாசத்தில்தான் செய்யவேண்டும் என்று சிலர் கருதுவதும் உசிதமல்ல. சுருதி ஸ்மிருதி முதலான கிரந்தங்களால் ஒருகாலத்தில் செய்யவேண்டுமென்று நிர்ணயமாகும் தர்மத்தை, அவைகளுக்கு மாறுதலாக வேறு காலத்தில் அனுஷ்டிக்கவேண்டுமென்று கூறத் தமிழ் நூல்களுக்கு அதிகாரமில்லை. பெரும்பாலும் துலாமாசத்தில்வரும் என்கிற கருத்துக்கொண்டு இந்நூலாசிரியர் வெளியிட்டிருப்பதாகத்தான் இதற்குப் பொருள் கொள்ளவேண்டும். ஆகையால் இவ்வருஷம் துலா மாசத்தில் தீபாவளியை அனுஷ்டிப்பதற்கு இதைப் பிரமாணமாகக் காட்டியதும் தவறேயாகும். இதுவரை எடுத்துக்காட்டிய பிரமாணங்களால் இவ்வருஷம் நரகசதுர்த்தசி தீபாவளிப் பண்டிகையை புரட்டாசிமீ 30உ விடியற்காலத்தில் நடத்தியதே சாஸ்திர சம்மதமென்று ஏற்பட்டது. இம்மட்டோடு விஷயத்தையும் பூர்த்திசெய்து பகவத்பிரார்த்தனையுடன் முடித்துக்கொள்கிறோம்.

சுபம். ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

காலையில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளல்.

நிகழும் குரோதனவூ புரட்டாசிமீ 2உ வெளிவந்த நமது ஆர்யதர்மம் 33-வது சஞ்சிகையில் நரகசதுர்த்தசி என்று தலையங் கங்கொண்ட வியாசத்தைப் பலரும் பார்த்திருக்கலாம். அதைப் பற்றிய சில விஷயங்களை யெழுத அப்பத்திரிகை மூலமாகவே ஆசைகொண்ட நான் முதலில் பத்திரிகா நேயர்களையும் இன்னும் பல அறிஞர்களையும் வணங்கி, இவ்வியாசத்தில் குணதோஷங்கள் இருந்தாலும் முக்கியமான கருத்தை அறியுமாறு இப்படித்தான் செய்யவேண்டியது என்பதை அறிவிக்கக்கேட்டுக்கொள்கிறேன். அதில் "कार्तिक्यां निशिदीपेन" என்று எழுதி அதற்கு கார்த்திகை நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமியுள்ள மாதத்தில் என்று அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்கிறார். அப்படியானால் கடந்த ரக்தாக்ஷிவூ கார்த்திகைமீ பௌர்ணமிக்குக் கார்த்திகை நக்ஷத்திர சம்பந்தமேயிராததால் கிருத்திகாதீபோத்ஸவம் அவ்வருஷம் எப்படியோ? தெரியவில்லை. அந்த கார்த்திக்யாம் என்ற பதத்தை "निशि" என்ற பதத்திற்கு விசேஷணமாகக்கொண்டால் இவ்வளவு கிலேசத்தை உண்டுபண்ணுததுடன் சம்பிரதாயத்திற்கும் ஒட்டியிருக்குமே "वचनवैयर्थ्य" என்பதுமுண்டாகாது. மேலும் "नक्षत्रेणयुक्तःकालः" என்ற பாணிநி ஸூத்திரத்தைக்கொண்டு

अश्विनीनक्षत्रेण युक्ता पौर्णमी आश्वयुजी आश्वयुजी अस्मिन्मास इति आश्वयुज्मासः" ॥

என்று ஷெ ஸூத்திரத்தால் இந்த அர்த்தம் கிடைத்ததாக எழுதி இருக்கிறார். அந்தப் பாணிநி ஸூத்திரமானது சமாஸத்தில் தத்தித ப்ரத்யயத்தை விதிக்கவந்ததேயொழிய சாந்திரமானக் கணக்கைக் குறிக்கவந்ததாகத் தெரியவில்லை. நக்ஷத்திரத்துடன் கூடிய பௌர்ணமியுள்ள மாதம்தான் சாந்திரமானக் கணக்கு என்றால் இன்னும் சில விரோதங்கள் தோன்றுகின்றன. அவையாவன—சென்ற ரக்தாக்ஷிவூ ஆடிமீ 1உ பௌர்ணமி 30 நாழிகையும், பூராடம் 13 நாழிகையும், ஷெ மாதம் 31உ பௌர்ணமி 51 நாழிகையும், திருவோணம் 27 நாழிகையும் இருக்கின்றன.

இதற்குமுன் ஆனிமீ பௌர்ணமியில் கேட்டை நக்ஷத்திர சம்பந்தமிருப்பதால் அதை ஜ்யேஷ்டம் என்று அங்கீகரிக்கவேண்டியிருப்பதாலும் ஆடிமீ முதல் பௌர்ணமியில் ஆஷாடயோகமாகவும் மறு பௌர்ணமியில் சிரவணயோகமாகவும் இருப்பதாலும் இந்த ஆடிமீ எந்த சுத்தத்தில் சேருமெனத் தெரியவில்லை. ஷெ வருஷம் கார்த்திக மார்கசீர்ஷங்களும் அததின் நக்ஷத்திரயோகம் இராததால் அவைகளும் எப்படிப் பொருந்தும்.

இவ்விதமான கஷ்டங்களை அடையாமலும் வைத்யநாத தீக்ஷிதீயம்என்ற பலதர்மசாஸ்திரங்களுக்கும் விரோதமில்லாமலும்ஷெ தர்மசாஸ்திர கிரந்தங்களில் சுக்லபக்ஷ பிரதமை முதலாகவே சாந்திரமானக் கணக்குகள் காண்கிறபடியாலும் இவைகளுக்கிணங்கவே பிராசீன சம்பிரதாயமான சாந்திரமானக் கணக்கையே ஒப்புக்கொள்வதுதான் உசிதமெனத் தோன்றுகிறது. விருதாதிகளை விதிக்குமிடங்களிலும் அக்கிரந்தக்காரர்களால் ஸௌரமானமாக விதிக்கப்பட்டதை ஸௌரமானமாகவும், சாந்திரமானமாகக்குறித்ததை சாந்திரமானமாகவும், அனுஷ்டிப்பதுதான் அறிஞர்களுக்கழகாகும். இஃதிப்படியிருக்க, ஜோதிஷக்ராந்தமாகிய காலாமிருதத்திலும் "**निषिद्धादिवसेष्वभ्यंगाविधिः**" என்று தொடங்கி "**इषे बहुले**" என்றும், தர்மசாஸ்திரச் சுருக்கம் என்றதில்,

"आश्वयुजे च मासे अपरे च पक्षे"

என்றிருப்பதாலும், இதற்கிணங்கவே சேஷதர்மம் என்பதில்,

आश्वयुक्कृष्णपक्षस्य चतुर्दश्यां जनार्दनम् ।
ब्राह्मे मुहूर्तेचोत्थाय स्मरेत्सर्वात्मकं विभुम ॥
तैलाभ्यङ्गं प्रकुर्वीत बन्धुभिस्सह धर्मज ॥

என்றும் சாற்றியிருப்பதாலும், தர்மசாஸ்திர சங்கிரகத்திலிருந்து வி. உமாமகேச்வர சாஸ்திரிகளால் சொல்லப்பட்டபடி உஷோப்யங்கம் சிவாத்ரி வ்ரதம் என்று மாதத்தைக் குறிக்காமல் பொதுவாக இருப்பதாலும்,

"तुलास्नानं, कृत्तिकादीपं, धनुर्मासि हरेःपूजा"

என்று இவைகளைமட்டும் ஸௌரமானமாகக் காண்பித்திருப்பதாலும், விருத்தர்கள் வாயிலாக சில வருஷங்களுக்குமுன் புரட்டாசி மாதத்தில் 'ஆச்வயுக்ருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில்' உஷோப்யாங்கம் செய்துகொண்டிருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையாலிவ்வருஷமும் சாஸ்திரங்களுக்குவிரோதமில்லாமல் நாளதுவுடு புரட்டாசி-மீ 30வயன்றே 'ஆச்வயுக்க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் தைலாப்யங்கம் செய்துகொண்டு தீபாவளி என்ற உற்சவத்தைக் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். பத்திரிகாபிமானிகளே ! இதில் ஐப்பிசிமாதத்தில் செய்யவேண்டியதாக வேறு ஏதாவது பிரமாணவாக்கியங்களிருந்தால் அதை என்மீது தயைபுரிந்து சொல்ப அறிவுள்ள என்னைப்போன்றவர்களின் சம்சயத்தைத் தீர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. ராமமூர்த்திசாஸ்திரீ.

கோமல் திருக்கணித பஞ்சாங்கம்.

ஓர் ஐயவினு.

இப்பஞ்சாங்கத்தில் வருகிற ஐப்பிசிமீ 30வ ஞாயிற்றுக்கிழமை சதுர்தசி 19-நாழிகை 43-விஞுடி போட்டு ஸர்வஅமாதர்ப்பணம்என்று கடைசியில் குறிப்பிட்டிருக்கிறது. அதற்கு மறுதினமாகிய கார்த்திகைமீ 1வ திங்கள்கிழமை அமாவாஸ்யை 15நாழிகை 40விஞுடிபோட்டு விருச்சிக அமாதிதிஎன்றும்குறிப்பிடப்பட்டிருக்கிறது. தர்சசிராத்தமான அமாதர்ப்பணத்தை ஒரு தினத்திலும் அதே தர்சதிதிப் பிரயுக்தமான சிராத்தம் மறுதினம் செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. இவ்விதம் செய்வது சாஸ்திர ஸம்மதம்தானு ?

தவிரவும் சென்ற ஆவணிமீ 25வ புதன்கிழமை ஸ்ரீஜயந்தி யோகத்திற்கு சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட லக்ஷணங்களெல்லாம் கூடியவரையில் பொருந்தியிருக்க ஷை தேதியில் ஷை புண்ய காலத்தை ஷை திருக்கணிதம் பஞ்சாங்கம் தவிர இதர பஞ்சாங்கங்களும் போடாதிருந்த காரணத்தையும் சிரமத்தைப் பாராமல் வைதிகதர்மாபிமானிகளான பண்டிதசிகாமணிகள் நம் ஆர்யதர்

மத்தின் வாயிலாக தகுந்த பிரமாண வசனங்களுடன் வருகிற கார்த்திகைமீ 1௨க்குள் வெளியிட வேணுமாகப் பிரார்த்திக்கிறேன்.

ரா. ராமச்சந்திரய்யன்,
மேலையூர் திருவிடமருதூர் போஸ்டு

ஓர் ஐய வினு.

கௌதமதர்ம ஸூத்திரம் பிராயச்சித்தப் பிரகாணத்தில் பரிசுத்தி ஹேதுக்கள் கூறுமிடத்தில் (மூன்ருவது பிரச்னம் முதல் அத்தியாயம், 12-வது ஸூத்திரம்) **उपनिषदो वेदान्तः** என்று ஆரம்பித்த ஸூத்திரத்தில் **अघमर्षणं, रुद्रं** என்ற இவைகளுக்கு முறையாக **ऋतञ्च सत्यञ्च = नमस्ते रुद्रमन्यते** என்று ஹாதத்திஞல் உரை எழுதப்பெற்றிருக்கிறது. மற்ற பதங்களுக்கு அந்தந்த ஸாமாக்கள் கிரமமாக உதாஹரிக்கப்பெற்றிருக்கின்றன. மேற்கூறிய மந்திரங்களுக்குமட்டில் யஜுர்வேத மந்திரங்களை உதாஹரிக்கப்பெற்றிருக்கிறபடியால் ஸாமவேதத்தில் அகமர்ஷண ருத்திர ஸூக்தங்கள் உண்டா? இல்லையா? என்ற இவ்வினுவிற்கு விடையை ஸாமவேத பிரமுகர்கள் தயவுசெய்து இதன் உண்மையை பிரமாணத்துடன்கூட இவ்வார்யதர்மத்தின் வாயிஞல் போதிக்குமாறு ரொம்பவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

K. S. சேஷராம சாஸ்திரி.

நம் ஆர்யதர்மம் சந்தா நேயர்களுக்கு.

குறிப்பு:—நம் ஆர்யதர்மப் பத்திரிகையில் வெளிவரும் எவ்வித விஷயங்களும் அந்தந்தக் கையொப்பக்காரருடைய அபிப்பிராயமாக ஆகுமேயன்றி, பத்திராதிபர்களுடையதாக ஆகமாட்டாவென்றும், பத்திராதிபர்களால் வெளியிடப்படும் விஷயமாயிருந்தால் அவர்களுடைய பூர்ணமான கையொப்பம் அவசியம் இருக்குமென்றும் அறிவிக்கப்படுகின்றது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.